**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT NO.I, ERODE**

**STC.NO. 50/2020**

**Deposition of Witness for: பு சா 1 குறுக்கு விசாரணை**

**Date: 31.07.2026**

**(Complainant present and Accused absent. Petition filed and allowed for accused)**

**Name: திரு. லோகேஸ்வரன் த/பெ. சுந்தரம்**

**சாட்சி மனுவின் மீது அனுமதிக்கப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. நான் 10 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன் என்பதன் அடிப்படையில், அரசாங்கம் மற்றும் வங்கி தொடர்பான அணுகுமுறைகள் எனக்குத் தெரியும் என்றால், சரிதான். வழக்கில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையானது ஸ்ரீ பாலாஜி டிரேடர்ஸ் என்ற தாயாரின் நிறுவனத்திலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட்ட தொகையா என்றால், இல்லை, எனது தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொடுக்கப்பட்ட தொகையாகும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால், இல்லை. வங்கி மற்றும் தொழில் ரீதியான பரிவர்த்தனைகளுக்கு நிரந்தர பான் கார்டு அவசியம் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றாலும், வழக்கு கடன் தொகையை எதிரிக்கு நேரடியாக கொடுக்காத காரணத்தினால்தான் வருமான வரி செலுத்துவதில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2. எதிரிதரப்பில் எனக்கும், எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பினை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், எனது வழக்கறிஞரிடம் கொடுத்திருந்தேன். என் முன்னிலையில் காண்பிக்கப்படும் அஞ்சலக

NISHA C Full additional Charge Digitally signed by NISHA C Date: 2026.07.31 16:37:05 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.I (FAC), Erode.

ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் மற்றும் முகவரி என்னுடையது என்றால், சரிதான். **மேற்படி ஆவணத்தின் அசல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்னிலையில் காண்பிக்கப்படும் அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள G.K.ஈஸ்வரன் எனது வழக்கறிஞர் என்றால், சரிதான். **மேற்படி ஆவணத்தின் அசல் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என் முன்னிலையில் காண்பிக்கப்படும் ஆவணம் எதிரிதரப்பில் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு என்றால், சரிதான். **மேற்படி அறிவிப்பின் அலுவலக நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. நான் எதிரிக்கு ரூ.2/- சதவீத வட்டிக்கு கடன் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி வட்டித்தொகையானது சட்டத்திற்கு புறம்பான அதிக வட்டி என்றால், சரியல்ல, எதிரிதான் மேற்படி வட்டித்தொகையினை செலுத்துவதாக கூறியிருந்தார். எதிரி ரூ.2/- சதவீத வட்டி தருவதாக ஒப்புக்கொண்டதாக ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கின் எதிரி தனது உடலில் கால்கள் செயலிழந்த நிலையில் உள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். 6 மாதத்திற்கான வட்டித்தொகை எவ்வளவு என்றால், சுமார் ரூ.48,000/- இருக்கும். எனக்கு முறையான வருமானம் இல்லாத நிலையில் வட்டித்தொகையான ரூ.48,000/-த்தைத் தவிர்த்து அசல் தொகையாக சொல்லியுள்ள ரூபாய் 4 இலட்சத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்வது நம்பும்படி இல்லை என்றால், சரியல்ல.

4. உண்மையிலேயே நான் எதிரிக்கு வழக்கு கடன் தொகையை கொடுக்கவில்லை என்றாலும், பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. வழக்கு காசோலையை முறையாக வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யாத காரணத்தினால்தான் காசோலையினை பின்புறத்தில் All Stamps Cancelled என்ற வங்கியின் முத்திரையுடன் கூடிய கையொப்பம் இல்லை என்றாலும், வழக்கு காசோலை முறையாக திருப்பப்பட்டது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு என்னுடையது

NISHA C
Full additional Charge
Digitally signed by NISHA C
Date: 2026.07.31 16:37:16 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.I (FAC), Erode.

என்றாலும், சரியல்ல, ரிட்டன் மெமோவை தாக்கல் செய்துள்ளேன். எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால், வழக்கு காலகட்டத்தில் எதிரி அவரது கணவரின் இரும்பு கடையின் வியாபாரத்தின் உதவியாக இருந்தார். வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையினாலும், மற்ற விவரங்கள் வேறொரு மையினாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

5. வழக்கு காசோலையை தடயவியல் நிபுணரின் அறிக்கை பெற அனுப்பி வைக்க ஆட்சேபனை உள்ளதா என்றால், இல்லை. பொதுவாக ரூ.20,000/-க்கு மேல் பரிவர்த்தனை செய்யும்பொழுது அதனை வங்கி மூலமாகத்தான் செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். அதேபோல் ரூபாய் 2 இலட்சத்திற்கு மேல் தொகை செலுத்தினால் அதனை வரைவோலை மூலமாகவோ அல்லது RTGS மூலமாகவோ தான் செலுத்தவேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். வழக்கில் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனது வங்கி கணக்கிலிருந்து எடுத்துக்கொடுக்கப்பட்டதா என்றால், இல்லை, கையில் ரொக்கமாக இருந்த தொகையினைக் கொண்டு கொடுக்கப்பட்டது. நான் உண்மையிலேயே எதிரிக்கு வழக்கில் சொல்லியுள்ள தொகையை கடனாக கொடுக்காத காரணத்தினால் தான் வரைவோலை மூலமாகவோ அல்லது RTGS மூலமாகவோ கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

6. ரூபாய் 4 இலட்சம் என்பது பெரிய தொகை என்றால், சரிதான். மேற்படி பெரிய தொகையை மறுபயன் எதுவும் இல்லாமல் 6 மாதத்திற்கு கடனாக கொடுத்ததாக சொல்லுவது நம்பும்படி இல்லை என்றால், சரியல்ல. வழக்கில் குறிப்பிட்டுள்ள தொகை சட்டப்படியாக வசூல் செய்ய வேண்டிய தொகை அல்ல என்றால், சரியல்ல. நான் எதிரியின் கணவர் முத்து என்பவர் மீது 27-08-2019 தேதியன்று தொழில் ரீதியாக வரவேண்டிய நிலுவைத்தொகை ரூ.2,69,000/- க்காக ஈரோடு G.H. காவல்நிலையத்தில் புகார் அளித்திருந்தேன் என்றால், சரிதான், எதிரியின் கணவர் என்னிடம் பணம்

NISHA C
Full additional Charge
Digitally signed by NISHA C
Date: 2026.07.31 16:37:24 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.I (FAC), Erode.

பெற்றுக்கொண்டு பொருட்களை விநியோகம் செய்யாத காரணத்தினால் புகார் கொடுத்திருந்தேன். மேற்படி காலகட்டத்தில் எதிரியின் கணவர் 20-09-2019 தேதியன்று ரூ.30,000/-மும், 20-12-2019 தேதியன்று ரூ.30,000/-மும், மீதமுள்ள தொயைான ரூ.2,00,000/-த்தை 01-05-2020 தேதிக்குள் கொடுத்துவிடுவதாக G.H. காவல் நிலைய அதிகாரிகளிடம் கடிதம் கொடுத்திருந்தார் என்றால், கடிதம் எழுதிக்கொடுத்திருந்தார், ஆனால் தேதி மற்றும் தொகை குறிப்பாக நினைவில் இல்லை.

7. மேற்படி புகார் விசாரணையின்பொழுது எனது அதிகாரத்தினைப் பயன்படுத்தி காவல் அதிகாரிகளின் உதவியுடன் எதிரியின் கணவரிடம் எதிரிக்குச் சொந்தமான கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட வெற்றுக்காசோலையை கேட்டிருந்தேன் என்றாலும், எதிரியின் கணவரும் எதிரிக்கு தெரியாமல் வீட்டில் வைத்திருந்த காசோலையை எடுத்து என்னிடம் கொடுத்தார் என்றாலும், சரியல்ல. சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கு பின்னிட்டு தான் வழக்கு காசோலை எனது கைகளுக்கு எவ்வாறு வந்தது என்று எதிரிக்கு தெரியவந்தது என்றாலும், எதிரி வழக்கு காசோலையின் நகலை அனுப்பி வைத்தால் குறிப்பான எதிர்வாதத்தை குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பி வைப்பதாக குறிப்பிட்டு பதில் அறிவிப்பினை அனுப்பியிருந்தார் என்றாலும், சரியல்ல. எனது புகார் மற்றும் பிரமாணப் பத்திரத்தில் எதிரி பணமோ, பதிலோ தரவில்லை எனக் குறிப்பிட்டுள்ள நிலையில், எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால், வழக்கிற்கு தொடர்பில்லாத சங்கதிகளை குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பியிருந்தார்.

8. எனக்கும், எதிரிக்கும் எவ்வித நேரடித் தொடர்பு மற்றும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றாலும், எதிரியின் பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் இவ்வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றாலும், கொடுத்ததாக சொல்லப்படும் வழக்கு கடன் தொகை முறையாக வங்கி மூலமாக கொடுக்கவில்லை என்றாலும், எனக்கு ரூபாய் 4 இலட்சம் கடனாக கொடுக்குமளவுக்கு

NISHA C Full additional Charge Digitally signed by NISHA C Date: 2026.07.31 16:37:30 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.I (FAC), Erode.

வருமானம் இல்லை என்றாலும், துர்லாபம் அடைய வேண்டி காவல் துறை அதிகாரிகளின் துணையுடன் கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட வெற்றுக்காசோலையை பெற்றுக்கொண்டு எதிரியின் அனுமதி பெறாமல் வழக்கு காசோலையை நானாக பூர்த்தி செய்து அதிகப்படியான வட்டி கேட்டு எதிரிமீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

Taken down before me in open court read over to the witness in the presence of accused. pleaded and admitted by him/her to be correct.

NISHA C

Full additional Charge
Digitally signed by NISHA C
Date: 2026.07.31 16:37:44 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.I (FAC),
Erode.